**20.12.2023**

**MC No.24/2022**

**ம.சா.1 சாகிதா, க/பெ ஆசிப்முகமது**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிமனுதாரர் என்னையும் எனது குழந்தையும் அழைத்து சென்று நான் விரும்பும் இடத்தில் தனிக்குடித்தனம் வாழ தயாராக உள்ளார் என்றால் எனக்கு விருப்பம் இல்லை. நான் எதிரிமனுதாரரை விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனுவும், எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தாக்கல் செய்த மனுவும் நிலுவையில் உள்ளது. கரூர் வைஸ்சியா வங்கி மற்றும் ICICI வங்கியிலும் கணக்கு உள்ளது. தற்சமயம் இரண்டு வங்கி கணக்குகளிலும் வரவு செலவு வைக்கவில்லை. சமூக நலத்துறையில் நான் அளித்த புகாரில் நான் மட்டும் ஆஜரானேன். எதிர்மனுதாரர் ஆஜராகவில்லை. 2022 ம் ஆண்டு ஜனவரில் நான் ஆஜரானேன். அப்போது எதிர்மனுதாரர் இந்தியாவில் தான் இருந்தார் ஆனால் அவர் ஆஜராகவில்லை.

2. முசிறி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் என்னுடன் பேசாமல் இருந்ததால் நான் எனது மகள் பெயரில் ஏதாவது சொத்தை எழுதிவைக்குமாறு கேட்டேன். எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் என்னுடன் சேர்ந்து வாழ்வதாக தெரிவித்தார் என்றால் நான் சொத்தை எழுதி தருமாறு கேட்டதால் ஒரு வருடம் வந்து சேர்ந்து வாழு நான் சொத்தை எழுதி வைக்கிறேன் என்று சொன்னார். எனக்கு அவர் மீது நம்பிக்கை இல்லாததால் நான் அவருடன் வாழவில்லை. மேற்படி காவல் நிலையத்தில் சமாதானம் பேசும் போது நான் பணிபுரியவில்லை. காவல் நிலையத்தில் எதிரிமனுதாரர் வேலையை விட்டு வந்து தன்னுடன் வாழுமாறு சொல்வதாக நான் எழுதிக்கொடுத்தேன் என்றால் நான் அவ்வாறு எழுதிக்கொடுக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தது தான். அந்த ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கோயம்புத்தூரில் உள்ள JK இன்சினியரிங் லிமிட்ல் எதிர்மனுதாரரிடமிருந்து பிரிந்த பின்பு பணிபுரிந்தேன் என்றால் இணைய வழி வாயிலாக 6 மாதம் மட்டும் 2022 ம் ஆண்டு ஜீலை முதல் டிசம்பர் வரை பணிபுரிந்தேன். மேற்படி காலங்களில் மாதம் ரூ,15,000/-ம் எனது வங்கி கணக்கில் சம்பளம் செலுத்தப்பட்டது.

3. நான் தாக்கல் செய்துள்ள மனு, முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் Assets and liablity affidavit ல் நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தாக்கல் செய்த மேற்படி ஆவணங்களில் நான் வேலைக்கு

செல்லவில்லை என்றும், வருமானம் எதுவும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பொய்யாக மேற்படி அபிடவிட் தாக்கல் செய்துள்ளதால் என்மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி நான் பணிபுரிந்த நிறுவனத்திற்கு meeting மட்டும் Attend செய்வேன். மேற்படி நிறுவனத்தில் Attendance Register தேவையில்லை. கொடுத்த வேலையை முடித்துவிட்டு தகவல் தெரிவித்துவிடுவோம்.மேற்படி வேலையை முடித்தது குறித்து யாரிடம் தகவல் தெரிவிப்பேன் என்று தற்போது ஞாபகமில்லை. மேற்படி நிறுவனம் கோயம்புத்தூரில் சித்ரா என்ற இடத்தில் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் மேற்படி நிறுவனத்தில் Exhibition சமயத்தில் பார்க்க சென்ற போது எடுத்த புகைப்படம். Yamaka Facino வண்டி 6 மாதத்திற்கு முன்பு எனது பெயரில் எனது அம்மா கொடுத்த பணத்தை வைத்து கோயம்புத்தூரில் வாங்கினோம். கோயம்புத்தூரில் நான் வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருந்ததால் அங்கு வாங்கினேன். மேற்படி வாகனம் ஒரே தொகையில் கட்டி வாங்கப்பட்டது. எனது வாட்ஸ்அப்பில் மேற்படி வாகனம் எனது சொந்த பணத்தில் வாங்கப்பட்டது என்று Status வைத்தேன் என்றால் பெயரக்காக வைத்தேன். திருமணத்திற்கு பின்பு கொடைக்கானலுக்கு தேனிலவுக்காக சென்றோம்.

(வழக்ககறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

உண்மை நகல்

ஒம்/-அ.நர்மதாராணி,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
துறையூர்.